தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தேனி மாவட்டத்தில் மழை

**ஆண்டிபட்டி,**

தேனி மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால் பெரும்பாலான இடங்களில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. இந்நிலையில் சனிக்கிழமை இரவு பெரியகுளத்தில் அதிக பட்சமாக 16 மி.மீ. மழை பெய்துள்ளது. தேனி மாவட்ட அளவில் சராசரியாக 24.20 மி.மீ. மழை பெய்துள்ளது. அதே போல் ஞாயிற்றுக்கிழமை மாலையிலும் தேனி மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. இதில் அதிக பட்சமாக உத்தமபாளையத்தில் 49 மி.மீ. மழையும், வீரபாண்டியில் 32 மி.மீ. மழையும், பெரியகுளத்தில் 22 மி.மீ. மழையும், வைகையில் 12 மி.மீ. மழையும், மஞ்சளாறில் 19 மி.மீ. மழையும், ஆண்டிபட்டியில் 2.80 மி.மீ. மழையும், அரண்மனைபுதூரில் 23.60 மி.மீ. மழையும், போடிநாயக்கனூரில் 16.80 மி.மீ. மழையும், சோத்துப்பாறையில் 11 மி.மீ. மழையும், தேக்கடியில் 54.80 மி.மீ. மழையும், பெரியாறில் 9.20 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

### நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை பணிக்கு மார்ச் 6-இல் நேர்முகத் தேர்வு

**சிவகங்கை,**

சிவகங்கை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையில் வேலை வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வு நடைபெற உள்ளதாக வேளாண் இணை இயக்குநர் மற்றும் திட்ட அலுவலர் எஸ்.செல்லத்துரை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: ஆட்சியர் வே.ராஜாராமனின் அறிவுரைப்படி, மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தில் வேளாண் தொழில்நுட்ப அலுவலர் பணிக்கு நேர்முகத் தேர்வு மார்ச் 6-ஆம் தேதி காலை 11 மணிக்கு நடத்தப்பட உள்ளது.

பி.எஸ்சி விவசாயம், தோட்டக்கலை, வனவியல், வேளாண்மையில் பிடெக், வேளாண் பொறியியல் பட்டதாரிகள் இதில் கலந்து கொள்ளலாம். மாதம் ரூ.10 ஆயிரம், பயணப்படி என மதிப்பூதியத்தில் 10 சதவீதமும், வருடாந்திர ஊதியத்தில் 3 சதவீதம் ஊதிய உயர்வும் வழங்கப்படும். வேளாண்மையில் பட்டயப் படிப்பு முடித்த புதியவர்களுக்கு ரூ.8 ஆயிரம், நீர்வடிப் பகுதி வேலைகளில் 3 ஆண்டு அனுபவம் உள்ளவர்களுக்கு மாதம் ரூ.9 ஆயிரம், நீர்வடிப் பகுதிகளில் 6 வருட அனுபவம் உள்ளவர்களுக்கு ரூ.10 ஆயிரமும் பயணப்படி மதிப்பூதியத்தில் 10 சதவீதமும், வருடாந்திர ஊதிய உயர்வு 3 சதவீதமும் வழங்கப்படும்.

விருப்பம் உள்ளவர்கள் திட்ட அலுவலர் மற்றும் வேளாண் இணை இயந்குநர், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை, ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை என்ற முகவரியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் அசல் கல்விச் சான்று, சாதிச் சான்றுடன் நேரில் பங்கேற்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**சேமிப்புக் கிட்டங்கிகளுக்கு ஈரப்பதமானி: ஆட்சியர் வழங்கினார்**

**விருதுநகர்,**

சேமிப்புக் கிட்டங்கிகளுக்கு ஈரப்பதமானி மற்றும் தார்ப்பாலின் உள்ளிட்டவைகளை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் வழங்கினார்.

விருதுநகர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் திங்கள்கிழமை மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் தலைமை வகித்துப் பேசுகையில், முதல்வர் தனிப்பிரிவு மனுக்கள் மீது உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மனுவில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் உண்மை தானா? என்பதை ஆய்வு செய்து சரியான விவரங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்களை குறிப்பிட்ட நாள்களுக்குள் பரிசீலனை செய்து மனுதாரர்களுக்கு உரிய தகவலை அளிக்க வேண்டும் என அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, வேளாண் வணிகத்துறை சார்பில் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் மூலம், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சேமிப்புக் கிட்டங்கி

உறுப்பினர்கள் 9 பேருக்கு ரூ.1.05 லட்சத்தில் தார்ப்பாலின் மற்றும் ஈரப்பதமானி ஆகியவற்றை ஆட்சியர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் முனுசாமி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) கொங்கன், கோட்டாட்சியர்கள் உதயகுமார் (அருப்புக்கோட்டை) ,கீர்த்திகா பிரியதர்ஷினி (சிவகாசி), பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் முத்துகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கோமாரி நோய் தாக்குதலை தடுக்க தடுப்பூசி**

**கோபி,**

கோபி அருகே, கோமாரி நோய் தாக்குதலை தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில், கடந்த ஆண்டு கால்நடைகளை கோமாரிநோய் தாக்கியதில் பல கால்நடைகள் உயிரிழந்தன. இதைத் தொடர்ந்து, கால்நடைகளுக்கு கோமாரிநோய் தாக்குதலை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அதன்படி, கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் குழுக்கள் அமைத்து, கிராம்தோறும் சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், வெளிமாநிலங்களில் இருந்து கால்நடைகளை கொண்டு வருவதற்கும், கால்நடைச் சந்தைகள் நடத்துவதற்கும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது. பல்வேறு நடவடிக்கைகளுக்கு பின்னர் ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், இந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதலை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கோபி அருகே, கடுக்காம்பாளையம், வெள்ளாங்கோவில், அய்யம்புதூர், நாகதேவம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இம்முகாமில், கன்றுக்குட்டி முதல் அனைத்து வயதுடைய மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில், 3 லட்சத்து 70 ஆயிரம் மாடுகள் உள்ளன. இதில் கோபி கோட்டத்திற்கு உள்பட்ட சத்தி, கோபி, பவானி, அந்தியூர் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 2 லட்சத்து 54 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதற்காக 45 மருத்துவக் குழுவினர் அமைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2 நாள்களில் மட்டும் சுமார் 12 ஆயிரம் மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு உள்ளது. இவ்வாறு கால்நடைகளைக் காப்பாற்ற தடுப்பூசி முகாம் அமைக்கப்படும்போது, விவசாயிகள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும். கோமாரிநோய் தாக்குவது போன்று அறிகுறி தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு, கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

விவசாயிகளின் தவறான அணுகுமுறையால்தான் கால்நடைகள் இறந்துவிடுகின்றன. எனவே,

விவசாயிகள் விழிப்புணர்வுடன் செயல்படவேண்டும் என கால்நடை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 45.44 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 45.44 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 756 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.43 டி.எம்.சி.

## வால்பாறை பகுதியில் சாரல் மழை: தப்பின தேயிலை தோட்டங்கள்

**வால்பாறை,**

நீண்ட நாள்களுக்குப்பின் சாரல் மழை பெய்ததால், வறட்சியின் பிடியிலிருந்த வால்பாறை பகுதி தேயிலைத் தோட்டங்கள் தப்பின. வால்பாறை பகுதியில் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப எஸ்டேட்களில் தேயிலை உற்பத்தி இருக்கும். கடந்த

காலங்களில் குறிப்பிட்ட சமயங்களில் மழை பெய்து வந்ததால், தேயிலை உற்பத்தி சீராக இருந்து வந்தது. ஆனால் இந்த ஆண்டு துவக்கத்தில் இருந்தே கடுமையான வெயில் காரணமாக வெப்பம் அதிகரித்து, தேயிலை மகசூலும் பாதிக்கப்பட்டது. இதே போல் வால்பாறை பகுதியில் உள்ள ஆறுகளும் வறண்டு காணப்பட்டன.

உற்பத்தி குறைவாக இருந்ததால் தாற்காலிக தொழிலாளர்களுக்கு எஸ்டேட் நிர்வாகத்தினர் வேலை வழங்காமல் இருந்து வந்தனர்.

இந்த நிலையில் திங்கள்கிழமை மதியம் சுமார் 20 நிமிஷம் வால்பாறை டவுன் மற்றும் எஸ்டேட் பகுதிகளில் மழை பெய்தது. இதனால், வறட்சியில் இருந்த தேயிலைத் தோட்டங்கள், உற்பத்தி பாதிப்பில் இருந்து தப்பும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இது எஸ்டேட் நிர்வாகத்தினருக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது.

## 7.12 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி தொடக்கம்

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை மாவட்டத்தில் 7 லட்சத்து 12 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணிகள் தொடங்கின.

தமிழகம் முழுவதும் சில மாதங்களுக்கு முன்பு கோமாரி நோயால் கால்நடைகள் பாதிக்கப்பட்டு இறந்தன. இந்நிலையில், கோமாரி நோய்த் தாக்குதலைத் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகத்தில் 6-வது சுற்று கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம் தொடங்கியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மார்ச் 1 முதல் மார்ச் 21 வரை இம்முகாம்கள் நடைபெறுகின்றன. திருவண்ணாமலையை அடுத்த சோமாசிபாடி கால்நடை மருந்தகத்துக்கு உள்பட்ட சோ.புதூர் கிராமத்தில் நடைபெற்ற கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணியை கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் டி.பி.ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். தொடர்ந்து கால்நடை உதவி மருத்துவர் ஆர்.திருப்பதி, கால்நடை மருத்துவர் ஷபினா ஆகியோர் தலைமையிலான மருத்துவ குழுவினர் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் செல்லன், ஊராட்சித் தலைவர் சிவக்குமார், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் சண்முகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். 7.12 லட்சம்

கால்நடைகளுக்கு: திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் 7 லட்சத்து 12 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட கால்நடைத்துறை திட்டமிட்டுள்ளது. இதற்காக தனி குழுக்கள் அமைக்கப்பட்டு அந்தந்த கிராமங்களில் தடுப்பூசிகள் போடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இம் மாதம் 21-ம் தேதிக்குள் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட வேண்டும் என்று மருத்துவர்களுக்கு கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் டி.பி.ராஜேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

**கோமாரி நோய்த் தடுப்பு முகாம்**

**தருமபுரி,**

தருமபுரி அருகேயுள்ள செட்டிக்கரையில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பு மருத்துவ முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. முகாமை ஆட்சியர் கே.விவேகானந்தன் தொடக்கிவைத்து பேசியது:

தருமபுரி மாவட்டத்தில் உள்ள 3.60 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி கடந்த 1-ஆம் தேதி முதல் போடப்பட்டு வருகிறது. நாள்தோறும் 15 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்படுகின்றன. விவசாயிகள் பொருளாதார இழப்பை தவிர்க்கவும், கால்நடைகளுக்கு கோமாரி நோய் முற்றிலும் தவிரிக்கும் வகையில் நடைபெறும் இந்த முகாம்களில் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட்டு பயன்பெற வேண்டும் என்றார் ஆட்சியர். நிகழ்ச்சியில், கால்நடைப் பராமரித் துறை இணை இயக்குநர் (பொ) லோகநாதன், உதவி இயக்குநர்கள் இளங்கோவன், ஜெகநாதன் மற்றும் மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

**ரசாயன உரங்கள் தேவையான அளவில் இருப்பு**

**நாமக்கல்,**

ரசாயன உரங்கள் தேவையான அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண் இணை இயக்குநர் கே.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பது:

நிகழ் பருவப் பயிர் சாகுபடிக்கு தேவையான ரசாயன உரங்கள் தேவையான அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதன்படி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் யூரியா 803 மெட்ரிக் டன்களும், டிஏபி 447 மெட்ரிக் டன்களும், பொட்டாஷ் 515 மெட்ரிக் டன்களும், கூட்டு உரங்கள் 1188 மெட்ரிக் டன்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. சூப்பர் பாஸ்பேட் உரங்கள் தேவையான அளவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தனியார் உர விற்பனை மையங்களில் யூரியா 739 மெட்ரிக் டன்களும், டிஏபி 53 மெட்ரிக் டன்களும், பொட்டாஷ் 123 மெட்ரிக் டன்களும், கூட்டு உரங்கள் 714 மெட்ரிக் டன்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தவிர, டான்பெட் இணையக் கிடங்கில் யூரியா 221 மெட்ரிக் டன்களும், டிஏபி 1215 மெட்ரிக் டன்களும், பொட்டாஷ் 302 மெட்ரிக் டன்களும், கூட்டு உரங்கள் 740 மெட்ரிக் டன்களும் இருப்பிலுள்ளன. உர விற்பனை மையங்களில் வேளாண் அலுவலர்களால் உர மாதிரிகள் எடுத்து உரங்களின் தரம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. தவிர, அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கு மேல் விற்கப்பட்டால், உரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உர விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் இந்த உரங்களை நியாயமான விலையில் பெற்றுப் பயன் பெற வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உணவு தானிய உற்பத்தி 1.24 லட்சம் ஹெக்டேராக அதிகரிப்பு**

**நாமக்கல்,**

மழை வளம் குறைந்த போதும் நாமக்கல் மாவட்டத்தில் 2013-14ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி 1.24 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

இதற்கு குறைந்த நீர்ப்பாசனத் திட்டங்களையும், புதிய பயிர் சாகுபடி தொழில்நுட்பங்களையும் பின்பற்றியதே முக்கியக் காரணம் என்று வேளாண்மைத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர். நெல், சிறுதானியங்கள் (சோளம், மக்காச்சோளம்), பயறு வகைகள் (உளுந்து, பச்சைப் பயிறு, துவரை)

ஆகியவைகளை உள்ளடக்கிய உணவு தானிய சாகுபடி இலக்காக நாமக்கல் மாவட்டத்துக்கு 2013-14ஆம் ஆண்டில் 1.15 லட்சம் ஹெக்டேர் என 2.04 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இலக்கைவிட உற்பத்தி அதிகரித்து, 1.24 லட்சம் ஹெக்டேர் என 2.73 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, நெல் உற்பத்தி 9175 ஹெக்டேரில் 12,574 மெட்ரிக் டன்னும், சிறுதானியங்கள் 99,164 ஹெக்டேரில் 2,11,552 மெட்ரிக் டன்னும், பயிறு வகைகள் 16,340 ஹெக்டேரில் 15,443 மெட்ரிக் டன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த உற்பத்தி 2012-13ஆம் ஆண்டில் இலக்கைவிட வெகுவாகக் குறைந்து, 1.09 ஹெக்டேரில் 2.13 லட்சம் மெட்ரிக் டன் மட்டுமே சாகுபடியாகியுள்ளது. இதில், நெல் 5505 ஹெக்டேரில் 35232 மெட்ரிக் டன், சிறுதானியங்கள் 78,000 ஹெக்டேரில் 1,56,600 மெட்ரிக் டன், பயிறு வகைகள் 15210 ஹெக்டேரில் 13,647 மெட்ரிக் டன் சாகுபடியாகியுள்ளன.

இந்த மாவட்ட சராசரி நெல் சாகுபடி பரப்பு 17000 ஹெக்டேரில் 2013-14ஆம் ஆண்டில் 9175 ஹெக்டேர் மட்டுமே சாகுபடி நடந்துள்ளது. எனினும், இந்த இழப்பு சிறுதானியங்களான சோளம், மக்காச்சோளம் ஆகியவற்றின் சாகுபடி உயர்ந்திருப்பதன் மூலம் ஈடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, சராசரி சிறுதானிய சாகுபடி பரப்பு 78000 ஹெக்டேரைவிட அதிகமாக 99000 ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டதன் மூலம் சோளம், மக்காச்சோளத்தின் உற்பத்தித் திறன் எந்த ஆண்டும் இல்லாத வகையில் ஒரு ஹெக்டேருக்கு 9.64 டன்னாக அதிகரித்திருப்பதாக வேளாண்மைத் துறை இணை இயக்குநர் கே.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது: நாமக்கல் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவான 776 மில்லி மீட்டராம். அதில், நிகழாண்டு 553 மி.மீட்டர் மழை மட்டுமே பெய்துள்ளது. மழையளவு குறைந்த போதும் சாகுபடி பரப்பு அதிகரிக்கக் குறைந்த நீர்ப்பாசனத் திட்டங்களான சொட்டுநீர் பாசனம், தெளிப்புநீர் பாசனம், மழை தூவான் போன்றவற்றையும், பயிர் எண்ணிக்கை பராமரிப்பு, வீரிய ஒட்டு ரக

விதைகள் போன்ற புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றியதும் முக்கியக் காரணமாகும்.

மேலும், 2012-13ஆம் ஆண்டில் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறக்கப்படாததால், மேட்டூர் கிழக்குக் கரை பாசனப் பகுதிகளில் நெல் சாகுபடி முழுமையாக தடைபட்டது. தொடர்ந்து, 2013-14ஆம் ஆண்டு தண்ணீர் திறக்கப்பட்டு, திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டதன் விளைவாக அந்தப் பகுதிகளில் நெல் சாகுபடி அதிகரித்துள்ளது என்றார் அவர்.

**பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை சரிவு**

**பரமத்தி வேலூர்,**

பரமத்தி வேலூர் வெற்றிலை ஏலச் சந்தையில் வெற்றிலையின் விலை சரிவடைந்துள்ளதால், வெற்றிலை பயிர் செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில் காவிரி கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் பயிர்கள் கர்நாடகம், கேரளம், குஜராத், மகாராஷ்டிரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.4,500-க்கும், கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.3,500-க்கும், வெள்ளைக்கொடி வெற்றிலை (முதியம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.3,000-க்கும் ஏலம் போனது. திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.4,000-க்கும், கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.2,500-க்கும், வெள்ளைக்கொடி வெற்றிலை (முதியம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.2,000-க்கும் ஏலம் போனது.

தற்பொழுது ஆந்திர வெற்றிலைகள் அதிக அளவில் தமிழகத்துக்கு வருவதாலும், விஷேச நிகழ்வுகள் அதிகம் இல்லாததாலும் வெற்றிலைகளின் விலை சரிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**தம்மப்பட்டி பகுதியில் கோமாரி நோய்த் தடுப்பு முகாம்**

**தம்மம்பட்டி,**

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி பகுதியில் கால்நடைத் துறை சார்பில் கோமாரி நோய்த் தடுப்பு முகாம் நடைபெற்று வருகிறது.

மார்ச் 1 ஆம் தேதி தொடங்கிய இந்தத் தடுப்பு முகாம் முதல்கட்டமாக தம்மம்பட்டி பேரூராட்சிக்குள்பட்ட கருமாரி வட்டம், சேரடி, பிள்ளையார்மதி, வாழக்கோம்பை ஆகிய பகுதியில் நடைபெற்றது. இதில் 1,237 மாடுகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டது.

இதைத் தொடர்ந்து நாகியம்பட்டி, உலிபுரம், செங்காடு, மூலப்புதூர், தகரப்புதூர், பச்சமலை, செந்தாரப்பட்டி, செங்ககட்டு, மண்மலை, பாலக்காடு, மாவாறு உள்ளிட்ட பகுதிகளில் மார்ச் 21 ஆம் தேதி வரை இந்த முகாம் நடைபெறுகிறது. இந்த முகாம்களில் அரசு கால்நடை மருத்துவர்கள் வித்யாஸ்ரீ, செந்தில்குமார், பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையிலான 5 குழுவினர் கோமாரி நோய்த் தடுப்பு ஊசி போடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**கருங்கல் பகுதியில் பலத்த மழை**

**கருங்கல்,**

கருங்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளில் திங்கள்கிழமை மாலை பலத்த மழை பெய்தது. கருங்கல் பகுதியில் சில நாள்களாக அதிக வெப்பம் நிலவியது. திங்கள்கிழமை காலை முதல் வானம் மேகமூட்டமாகக் காணப்பட்டது. இந்நிலையில், மாலை 4 மணி முதல் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் கருங்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளான பள்ளியாடி, மாமூட்டுக்கடை முள்ளங்கனாவிளை, வெள்ளியாவிளை, நடுத்தேரி, பாலூர், மாங்கரை, நட்டாலம், செல்லங்கோணம், கப்பியறை, புதுக்கடை, பைங்குளம் உள்ளிட்ட இடங்களில்

பலத்த மழை பெய்தது. இம்மழையால் இப்பகுதிகளில் உள்ள நெல்லிக்குளம், வால்குளம், மதுரைகுளம், பப்புரான்குளம், பாலூர்குளம், சிங்கினி குளம் உள்ளிட்ட குளம், குட்டைகளில் ஒரளவுக்கு மழை நீர் தேங்கியது.

**கருங்கல் பகுதியில் பலத்த மழை**

**கருங்கல்,**

கருங்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளில் திங்கள்கிழமை மாலை பலத்த மழை பெய்தது. கருங்கல் பகுதியில் சில நாள்களாக அதிக வெப்பம் நிலவியது. திங்கள்கிழமை காலை முதல் வானம் மேகமூட்டமாகக் காணப்பட்டது. இந்நிலையில், மாலை 4 மணி முதல் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் கருங்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளான பள்ளியாடி, மாமூட்டுக்கடை முள்ளங்கனாவிளை, வெள்ளியாவிளை, நடுத்தேரி, பாலூர், மாங்கரை, நட்டாலம், செல்லங்கோணம், கப்பியறை, புதுக்கடை, பைங்குளம் உள்ளிட்ட இடங்களில் பலத்த மழை பெய்தது. இம்மழையால் இப்பகுதிகளில் உள்ள நெல்லிக்குளம், வால்குளம், மதுரைகுளம், பப்புரான்குளம், பாலூர்குளம், சிங்கினி குளம் உள்ளிட்ட குளம், குட்டைகளில் ஒரளவுக்கு மழை நீர் தேங்கியது.

**விவசாயிகளுக்கு கணினிப் பயிற்சி**

**விருத்தாசலம்,**

விருத்தாசலத்தில் விவசாயிகளுக்கு கணினி கையாளுதல் குறித்த பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது. விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்பில் கணினியை பயன்படுத்தும் முறை, வேளாண்மை சார்ந்த இணையங்களை கையாளுதல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை அறிதல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி வகுப்பை வேளாண் அறிவியல் நிலையத் தலைவர், பேராசிரியர் அருணாச்சலம் தொடங்கிவைத்தார். விஞ்ஞானி சரவணன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். பயிற்சியில் 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இரண்டாம் கட்ட சமரச பேச்சில் தீர்வு கிடைக்கும்: மீனவர்கள் நம்பிக்கை**

"இலங்கையில் நடக்கும், தமிழக - இலங்கை மீனவர்களின், இரண்டாம் கட்ட பேச்சு, பல ஆண்டு கால சிக்கல்களுக்கு நிச்சயம் தீர்வை ஏற்படுத்தும்' என, தமிழக மீனவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். தமிழக - இலங்கை மீனவர்கள் பிரதிநிதிகள் பங்கேற்ற பேச்சு, ஜன., 27ல் , சென்னையில் நடந்தது. தீர்மானங்கள் : இதில், "இரு தரப்பிலும் மீனவர்கள் கைது நடவடிக்கைகளை கைவிடுவது; சிறை பிடித்தோரை உடனடியாக விடுவிப்பது; அடுத்த கட்ட பேச்சு நடக்கும் வரை, ஒரு மாத காலத்திற்கு, பாக்., நீரிணைப் பகுதிக்கு, தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதில்லை; தடை செய்யப்பட்ட வலைகள் பயன்பாடு கூடாது' என, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த நிலையில், "இரண்டாம் கட்ட பேச்சு, இலங்கை தலைநகர், கொழும்பில், இம்மாதம், 13ம் தேதி நடக்கும்' என, அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகம், புதுச்சேரியில் இருந்து, மீனவப் பிரதிநிதிகள்,13பேர், இதில் பங்கேற்கின்றனர்.பேச்சுவார்த்தையில் பங்கேற்க உள்ள, தேசிய மீனவர் பேரவை தலைவர், இளங்கோ கூறியதாவது: இதற்கு முன், 2004, 2010 மற்றும் 2011லும், தொண்டு நிறுவனங்கள் ஏற்பாட்டில், சமரச பேச்சு நடந்தது; இது, அதிகாரபூர்வமான பேச்சு அல்ல. தற்போதைய பேச்சு, இரு நாட்டு அரசுகள் ஏற்பாடு செய்தது. சென்னையில் நடந்த முதற்கட்ட பேச்சு, சுமுகமாக நடந்தது. இதன்படி, தமிழக மீனவர்கள், பாக்., நீரிணைப் பகுதியில், பிப்., 13 முதல், மீன் பிடிக்கச் செல்லாமல், சுய கட்டுப்பாடுடன் உள்ளனர். சுமுக தீர்வு வரவேண்டும் என்பது தான் நோக்கம்.

பிரச்னைக்கு தீர்வு : இரண்டாம் கட்ட பேச்சு, பயன் உள்ளதாக இருக்கும். பல ஆண்டுகளாக தொடரும், தமிழக - இலங்கை மீனவர் பிரச்னைக்கு தீர்வு காணப்படும். அரசியல் தலைவர்கள் பலர், சுமுக தீர்வு ஏற்பட்டு விடக்கூடாது என்ற நோக்கில், குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்; அது, எடுபடாது. பொதுவாக எல்லாருக்கும், சமூக அக்கறை வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## ரூ.4 கோடிக்கு பருத்தி விற்பனை

**ஆத்தூர்:** ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், நான்கு கோடி ரூபாய்க்கு பருத்தி விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள் மற்றும் தானியம் ஏலம் நடந்து வருகிறது.

நேற்று நடந்த, பருத்தி ஏலத்தில், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, விழுப்புரம், பெரம்பலூர், கடலூர் மாவட்டங்களில் இருந்து, 1,200 விவசாயிகள், 12,624 மூட்டை பி.டி., ரகம், 4,505 மூட்டை டி.சி.ஹெச்., ரகம் என, மொத்தம், 17 ஆயிரத்து, 129 பருத்தி மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், ஆத்தூர், சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர் பகுதிகளை சேர்ந்த, 20 வியாபாரிகள் கலந்து கொண்டனர். பி.டி., ரகம் குவிண்டால் அதிகபட்சமாக, 5,216 ரூபாய், குறைந்தபட்சம், 4,629 ரூபாய், டி.சி.ஹெச்., ரகம் குவிண்டால் அதிகபட்சம், 7,249 ரூபாய், குறைந்தபட்சம், 5,569 ரூபாய் என, மொத்தம் நான்கு கோடி ரூபாய்க்கு விற்பனையானது.

## மானாவாரி பயிர் மகசூல் அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி : உளுந்து, பருத்தி பஞ்சுக்கு "டாப்' விலை கிடைத்தது

**தியாகதுருகம் :** தியாகதுருகம் பகுதியில் சாகுபடி செய்த மானாவாரி பருத்தி, உளுந்து பயிர்கள் கடந்த 4 ஆண்டில் இல்லாத அளவுக்கு கூடுதல் மகசூலை கொடுத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதேபோல் கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் உளுந்து, பருத்தி பஞ்சு அதிக விலைக்கு விற்பனையானது. தியாகதுருகம் பகுதியில் பருத்தி, உளுந்து ஆகியவை முக்கிய மானாவாரி பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. மழை நீரை நம்பி மானாவாரி நிலங்களில் இப்பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் ஆக., மாதம் பருத்தி விதைப்பு பணிகள் துவக்கப்படுகிறது. அதேபோல் அக்., மாதம் உளுந்து சாகுபடி செய்யப்படு கிறது. உளுந்து பயிரை பொறுத்த வரை கடும் மழை, வறட்சி இவற்றை தாக்குபிடித்து வளர்ந்து நல்ல பலனை கொடுக்கும் தன்மை கொண்டது. கடந்த ஆண்டு பருவமழை சீராக இருந்ததால் உளுந்து செடிகள் செழித்து வளர்ந்து நல்ல பலனை கொடுத்தது. பருத்தி செடிகளுக்கு அளவான ஈரம் தேவைப்படுகிறது. கடந்த ஆண்டு இடைவெளி விட்டு பருவமழை பெய்ததால் பருத்தி செடிகள்

தழைத்து வளர்ந்தது. வழக்கமாக பருத்தி காய்கள் முற்றி பஞ்சு வெளிப்படும் தருணத்தில் பருவமழை தீவிரமடைவது வழக்கம். குறிப்பாக புயல் மழையால் செடிகள் உடைந்து சேதம் அதிகரித்து நஷ்டத்தை கொடுக்கிறது. கடந்த ஆண்டு மழையளவு குறைந்ததால் பஞ்சு பாதிப்பில் இருந்து தப்பியது. இதனால் விவசாயிகள் எதிர்பார்த்த பலனை கொடுத்தது.கடந்த 2012ம் ஆண்டு சாகுபடி செய்த பருத்தியில் ஏக்கருக்கு 2.5 குவிண்டால் பஞ்சு மகசூல் மட்டுமே கிடைத்தது. கடந்த ஆண்டு இரண்டரை மடங்கு உயர்ந்து 6 குவிண்டால் பஞ்சு கிடைத்துள்ளது. விவசாயிகள் எதிர்பார்த்ததை போல் கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் அதிகபட்சமாக ஒரு குவிண்டால் பஞ்சு 5,400 ரூபாய் வரை விற்பனையானது. அதேபோல் உளுந்து மகசூலும் கடந்த 4 ஆண்டில் இல்லாத அளவுக்கு அதிகரித்தது. பயிரிட்டவர்களுக்கு கூடுதல் பலனை கொடுத்துள்ளது. கடந்த 2012ம் ஆண்டு ஏக்கருக்கு 150 கிலோ உளுந்து மகசூல் மட்டுமே கிடைத்தது. கடந்த ஆண்டு மூன்றுமடங்கு உயர்ந்து 470 கிலோ கிடைத்துள்ளது. பருத்தி பஞ்சை போலவே உளுந்து விலையும் கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் அதிக விலைக்கு விற்பனையானது.இம்முறை 100 கிலோ ஒரு மூட்டை 5,600ஆயிரம் ரூபாய் வரை விலை போனது. கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை குறைந்து பிற பயிர்கள் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் நிலையில் மானாவாரியில் சாகுபடி செய்த பருத்தி, உளுந்து பயிர்கள் கூடுதல் பலனை கொடுத்துள்ளதோடு, இவை அதிக விலைக்கு விற்பனையானதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கச்சிராயபாளையம் பகுதியில் மஞ்சள் அறுவடை பணி தீவிரம்

**கச்சிராயபாளையம்** : கச்சிராயபாளையம் பகுதியில் மஞ்சள் அறுவடை பணிகள் தீவிரம்அடைந்துள்ளது. கச்சிராயபாளையம் சுற்றியுள்ள பகுதிகளில் நெல், கரும்பு பயிர்களுக்கு அடுத்தபடியாக மஞ்சள் அதிகளவில் பயிர் செய்யப்படுகிறது. மஞ்சள் பயிர் 6 மாதத்தில் அறுவடைக்கு தயாராகிறது. தற்போது மஞ்சள் பயிர்களின் அறுவடை பணிகள் தீவிரம் அடைந்துள்ளது. சந்தையில் உருளை மஞ்சள் ரூ 5,000 முதல் 6,500, விரலி ரூ6,000 முதல் 8,500 வரை விலைபோகிறது. இந்த ஆண்டு மஞ்சள் நல்ல விளைச்சல் பெற்றுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இவற்றை விற்பனைக்கு சேலம், ஈரோட்டிற்கு கொண்டு எடுத்து செல்ல வேண்டிய நிலை இருப்பதால் விவசாயிகள் மிகுந்த இன்னல்களுக்கு

ஆளாகி வருகின்றனர். கள்ளக்குறிச்சி பகுதியில் மஞ்சள் கொள்முதல் நிலையம் இருந்தால் விவசாயிகள் சிரமமின்றி விற்க முடியும். பிற மாவட்டங்களுக்கு ஏற்றிச் செல்லும் பணம், நேர விரையத்தை குறைக்க முடியும். மேலும் இப்பகுதியில் மஞ்சள் சாகுபடி அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கள்ளக்குறிச்சியில் மஞ்சள் சந்தையை துவக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### மீனவர்களுக்காக கட்டுமான திறன் பயிற்சி மையம்

**பழவேற்காடு**: மீனவர்களின் மறுவாழ்வாதாரத்திற்காக, கட்டுமான திறன் பயிற்சி மையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடந்தது. பழவேற்காடு பகுதியில், மீனவர்களின் மறுவாழ்வாதாரத்திற்காக, தமிழக அரசு கேட்டு கொண்டதன் பேரில், எல் அன் டி நிறுவனம், 3.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பொன்னேரி அடுத்த, பிரளயம்பாக்கம் கிராமத்தில், சிவில் கட்டுமான திறன் பயிற்சி மையம் ஒன்று அமைக்க உள்ளதுஅங்கு, குறைந்த கல்வி தகுதி கொண்ட மீனவர்களுக்கு, கட்டுமான துறை சார்ந்த பயிற்சிகள் இலவசமாக அளிக்கப்பட உள்ளன. பயிற்சி பெறுபவர்கள், 25 பேர் கொண்ட குழுக்களாக பிரித்து, மூன்று மாத பயிற்சி அளிக்கப்படும். மூன்று ஆண்டுகளில், 600 பேருக்கு, பயிற்சி அளித்து, எல் அன் டி நிறுவனத்தின், பல்வேறு பகுதிகளில் நடைபெறும், கட்டுமான பணிகளில் வேலை வாய்ப்பு வழங்கவும் திட்டமிட்டுஉள்ளது.பயிற்சி மையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா, பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் பொன்ராஜா தலைமையில் நடந்தது. அமைச்சர் ரமணா, மாவட்ட ஆட்சியர் வீரராகவராவ் ஆகியோர் பங்கேற்று அடிக்கல் நாட்டினர். எல் அன் டி நிறுவன அதிகாரிகள் அனில் சாப்ரியால், காந்திராஜன், கோபிநாத் மேனன் உள்ளிட்டோர் உடனடிருந்தனர். இந்த பயிற்சி மையத்திற்கான கட்டுமான பணிகள் முடிந்து, இந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்து செயல்படும் என, அவர்கள் தெரிவித்தனர்.

### கரும்புத் தோகையில் கம்போஸ்ட் உரம்

**மதுரை** : "கரும்புத் தோகையில் கம்போஸ்ட் உரம் தயாரிப்பதன் மூலம், அவை வீணாகாமல் தவிர்க்கலாம்," என, நீர்மேலாண்மை நிலைய, துணை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். அவர் கூறியுள்ளதாவது: மண்வளத்தை பாதுகாக்க, வேளாண் கழிவுகளை, இயற்கை எருவாக மாற்றி பயன்படுத்தலாம்.

கரும்பு அறுவடையின் போது, அதன் எடையில் 20 சதவீதம் உள்ள தோகையை, எரித்து விடுகின்றனர். இதனால் பாதிப்புகள் ஏற்படுகின்றன. கந்தக, தழைச் சத்துக்கள் காற்றில் விரயமாகின்றன. மண்ணில் நன்மைதரும் கோடிக்கணக்கான நுண்ணுயிர்கள் வெப்பத்தால் இறக்கின்றன. நிலத்தில் இரும்புச் சத்து பற்றாக்குறை அதிகரிக்கிறது. கரும்புத் தூர்களின் முனைகள் கருகி, மறுதாம்பு பயிரில் எண்ணிக்கை குறைந்து, கரும்பு மகசூலும் குறைகிறது. தோகையை, கம்போஸ்ட் உரமாக மாற்றுவது நல்லது. 100கிலோ கரும்பு தோகையை, 7 க்கு 3 மீட்டர் பரப்பில், 15 செ.மீ., உயரத்தில் பரப்ப வேண்டும். ராக்பாஸ்பேட், ஜிப்சம் தலா 2 கிலோ, யூரியா ஒரு கிலோ கலந்து தூவ வேண்டும். பின் மண், மாட்டுச்சாணம், மக்கிய குப்பை தலா 5 கிலோவை, 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து, தோகை நனைய தெளிக்க வேண்டும். இதுபோல ஒரு மீட்டர் உயரம் படுக்கைகள் அமைத்து, கடைசி அடுக்கின் மீது 1:1 என்ற வீதத்தில் கலந்து 5 செ.மீ., உயரத்திற்கு மூடிவிட வேண்டும். இதன்மேல் தண்ணீரை தெளிக்க வேண்டும். ஐந்தாவது மாத இறுதியில் தோகைகள் நன்கு மக்கி, ஊட்டமேற்றிய கம்போஸ்ட் உரம் கிடைக்கும், என கூறியுள்ளார்.

## பூத்துக்குலுங்கும் மா மரங்கள் மகிழ்ச்சியில் விவசாயிகள்

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில், மா மரங்கள் பூத்து குலுங்குவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகதோப்பு உட்பட மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதியில், விவசாயிகள், 500க்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பில், மா விவசாயம் செய்து வருகின்றனர்.சப்பட்டை, பஞ்சவர்ணம் உட்பட, பல வகையான மா மரங்கள் உள்ளன. இங்கு விளையும் மாங்காய்கள், திருவனந்தபுரம், கோட்டயம் உட்பட பல பகுதிகளுக்கும் அனுப்பபட்டு வருகிறது. ஆண்டு தோறும், தை மாதம், மா மரங்கள் பூக்க ஆரம்பிக்கும். கடந்தாண்டு சரி வர மழை பெய்யாத நிலையில், குறைவாக மா மரங்கள் பூக்கும் என விவசாயிகள் கருதினர்.அவர்கள் எதிர்பார்த்ததை விட அதிகளவில் மரங்களில் பூக்கள் வந்துள்ளது. இதனால், மகிழ்ச்சியடைந்துள்ளனர்.விவசாயி கந்தையா, ""கடந்தாண்டை விட, இந்தாண்டு, அதிகளவில் மா மரங்களில் பூக்கள் வந்துள்ளது. இதனால் மாங்காய் அதிகளவில் விளைச்சல் இருக்கும் என எதிர்பார்க்கிறோம்,'' என்றார்.

## தென்னையில் கவனம் செலுத்த பரிந்துரை விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க முடிவு

**திண்டுக்கல்** : தென்னைகளுக்கு ரூ. 50 செலவில் இடுபொருளும், ஈரப்பதம் இருக்கும் வகையில் தண்ணீரும் பாய்ச்சினால், முதல் தரமான காய்களை அதிக அளவில் பெறலாம், என விவசாயிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் தென்னை உற்பத்தியில் திண்டுக்கல் நான்காவது இடத்தில் உள்ளது. தொடர் வறட்சியின் காரணமாக பெரும்பாலான தென்னைகள் கருகியதால், விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர். மாவட்டத்தில் 22 ஆயிரத்து 344 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ஒரு லட்சத்த 14 ஆயிரத்து 850 மெட்ரிக் டன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் உபரியாக உள்ள ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 360 மெட்ரிக் டன் தேங்காய்கள் வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தென்னை விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக பல்வேறு பயிற்சி முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. மரம் ஏறுவதற்கான கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. டாக்டர் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடத்தப்பட்ட இலவச பயிற்சி முகாமில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு ஆண்டும் ஒரு தென்னைக்கு ரூ. 50 செலவில் யூரியா, சூப்பர் பாஸ்பேட், நுண்ணூட்ட சத்து போன்றவற்றை குறைந்த அளவில் இடுபொருளாக பயன்படுத்த வேண்டும்.

ஒரே அளவில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஈரப்பதம் இருந்தாலே, தென்னைகள் அதிக மகசூல் அளிக்கும். சுண்ணாம்பு சத்து இடுபொருளில் இருந்தால் முதல்தரமான தேங்காய்கள் கிடைக்கும். இதனால், அதிக லாபத்தை விவசாயிகள் பெறலாம் என விவசாயிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

## பாசன விவசாயிகள் கோரிக்கை மார்கண்டேய நதியில் மணல் அள்ள தடை

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி பகுதி ஐந்தாண்டாக வறண்டு கிடக்கும் மார்கண்டேய நதியில் மணல் அள்ள தடை விதிக்க வேண்டுமென, அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேப்பனப்பள்ளி யூனியன், கர்நாடகா மாநிலம் மற்றும் ஆந்திர மாநில எல்லையில் அமைந்துள்ளது. இந்த பகுதியில், கர்நாடகா மாநில

எல்லையான முத்தியால்மடுகு என்ற மலை பகுதியில் இருந்து வெளியேறும் சிறு,சிறு ஓடைகள் சேர்ந்து, மார்கண்டேய நதியாக உருவாகிறது. இந்த பகுதியில் உள்ள மலைகளில் இருந்து வெளியேறும் நீர் மார்கண்டேய நதியில், ஆண்டு முழுவதும் தண்ணீர் இருக்கும். மழை காலங்களில் அதிக அளவில் வரும் மழை நீரை சேமிக்க மாரச்சந்திரம் அருகே தடுப்பணையும் கட்டப்பட்டது.

இந்த நீர், வறட்சி காலங்களில் ஆற்றில் திறந்து விடப்படும். இங்கு உருவாகும் மார்கண்டேய நதி, மாரசந்திரம், ஜீனூர், கொரல்நத்தம், ஜிங்கலூர், வீரோஜிபள்ளி, நெடுமறிதி, திப்பனப்பள்ளி, பண்டப்பள்ளி, கொத்தூர், தளவாப்பள்ளி, குந்தாரப்பள்ளி, சாமந்த மலை வழியாக கல்லுகுறி வந்து, கிருஷ்ணகிரி பெரிய ஏரியை வந்தடைகிறது.ஆண்டு முழுவதும் மார்கண்டேய நதியில் வரும் தண்ணீரை கொண்டு வேப்பனப்பள்ளி யூனியனில், ஐந்தாயிரம் ஏக்கரில், தென்னை, மற்றும் பணப்பயிர்கள் சாகுபடி செய்தனர். மேலும், இந்த நதியில் இருந்து வரும் தண்ணீரை, கிருஷ்ணகிரி பெரிய ஏரியில் நிரப்பி, அங்கிருந்து கால்வாய் மூலம், பர்கூர் மற்றும் போச்சம்பள்ளி பகுதியில் உள்ள ஏரிகளுக்கு நிரப்ப, படேதலாவ் ஏரி கால்வாய் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில், கடந்த, 12 ஆண்டுகளுக்கு முன்பு கர்நாடகா மாநில எல்லையில் உள்ள மலை பகுதிகளில் கர்நாடகா அரசு தடுப்பணைகளை கட்டியது. இதனால், மார்கண்டேய நதியில் தண்ணீர் வரத்து குறைந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளாக மார்கண்டேய நதியில் தண்ணீர் வரத்து முற்றிலும் தடைப்பட்டது. இதனால், ஆற்று பாசன பகுதியில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும், மார்கண்டேய நதியில் இருந்து அதிக அளவில் மணல் அள்ளப்பட்டதால், நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது.

இதன் காரணமாக, ஆற்று பாசன பகுதிகளில் இருந்த தென்னை மரங்களும் தற்போது காய்ந்து வருகிறது. மேலும், நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக குறைந்ததால், எந்த பயிர்களையும் சாகுபடி செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். தங்கள் நிலங்களில் உள்ள காய்ந்த தென்னை மரங்களை வெட்டிவிட்டு, பல விவசாயிகள் அந்த நிலங்களில் மாங்காய் மரங்களை வளர்த்து வருகின்றனர்.

மார்கண்டேய நதியில் தண்ணீர் வரத்து முற்றிலும் தடைபட்ட நிலையில், பல கோடி ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்ட படேதலாவ் ஏரி கால்வாய் திட்டமும் செயல்படுத்த முடியாத நிலை உள்ளது. மார்கண்டேய நதி பாசன பகுதிகளில்

உள்ள விவசாயத்தை காப்பாற்ற அந்த பகுதியில் மணல் அள்ளுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மானிய விலையில் "வைக்கோல்' விற்பனை: விவசாயிகளுக்கு அழைப்பு

**கம்பம்** : அரசு சார்பில், வைக்கோல் விற்பனை துவங்கியுள்ளது. விவசாயிகள் கால்நடை மருத்துவமனையில், மானிய விலையில் வைக்கோல் விற்பனை துவங்கியுள்ளது.

கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், அரசு மானிய விலையில், மாடுகளுக்கு வைக்கோல் விற்கும் திட்டத்தை துவக்கியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே பருவமழை சரிவர பெய்யவில்லை. கம்பம் பள்ளத்தாக்கில், இருபோக நெல் சாகுபடியில், ஒரு போகம் மட்டுமே எடுக்கப்பட்டது. மற்றொரு போகம் கைவிடப்பட்டது. ஒரு போக விவசாயத்திலும், வைக்கோலை,கேரள வியாபாரிகள் கூடுதல் விலை கொடுத்து வாங்கி சென்றுவிட்டனர்.எனவே,கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதிலும் மார்ச், ஏப்,மே மாதங்களில் கோடையில் கடும் வெயில் இருக்கும். எனவே கால்நடைகள் வளர்ப்போர், மேய்ச்சலுக்கு தீவனம் இன்றி சிரமப்படுவர். விவசாயிகளின் இந்த இக்கட்டான நிலையை சமாளிக்க,அரசே, கால்நடைகள் வைத்திருப்போருக்கு, மானிய விலையில் வைக்கோல் விற்கும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.இந்த திட்டத்தில், கம்பம் கால்நடைத்துறையினர் வைக்கோல் விற்பனையை துவக்கியுள்ளனர்.

உத்தமபாளையம் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் ஜெகதீசன் கூறுகையில், "" ஐந்து மாடுகள் வைத்திருப்போருக்கு 105 கிலோ வரை தரப்படும். கிலோ ஒன்றின் விலை 2 ரூபாய் மட்டும். உத்தமபாளையம், கம்பம், பெரியகுளம், ஆண்டிபட்டி ஆகிய இடங்களில் வைக்கோல் விற்பனை நடக்கிறது. கம்பத்தில் கால்நடை மருத்துவமனையில் விற்கப்படுகிறது. ரேஷன் கார்டு, பாஸ்போர்ட் போட்டோ இரண்டு கொடுத்து, வைக்கோல் பெற்றுக் கொள்ளலாம். தேனி மாவட்டத்திற்கு சேலத்தில் இருந்து வைக்கோல் வருகிறது" என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

மல்பரி சாகுபடி குறைந்து பட்டுக்கூடு உற்பத்தி பாதிப்பு:



**சேலம்:** தமிழகத்தில் மழை இல்லாததால் மல்பரி சாகுபடி குறைந்து, பட்டுக்கூடுகளின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஈரோடு, விழுப்புரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், கரூர், வேடசந்தூர், பழனி, காங்கேயம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் மஞ்சள், வெண் பட்டுக்கூடுகளை அதிகளவில் உற்பத்தி செய்து வருகின்றனர். சேலம் மாவட்டம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. கடந்த மூன்று மாதமாக, தமிழகம் முழுவதும் மழை இல்லாததால் கிணறு, போர்வெல்களில் நீர்மட்டம் குறைந்துள்ளது. இதனால் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ள செடிகளுக்கு தண்ணீர் விட முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். போதிய தண்ணீர் இல்லாததால் மல்பரி செடிகளில் இலைகளின் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் தமிழக முழுவதும் மஞ்சள், வெண்பட்டுக்கூடுகளின் உற்பத்தி பாதியாக குறைந்துள்ளது.

இது குறித்து சேலம் பட்டு வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது: பொதுவாக பட்டுக்கூடுகள் உற்பத்திக்கு சாதகமான குளிர், வெப்பம் இருக்க வேண்டும்.

தற்போது மழை இல்லாததால் பட்டுக்கூடுகளின் உற்பத்தி குறைந்துள்ளது. சேலம் பட்டுக்கூடு அங்காடிக்கு வெண்பட்டுக்கூடுகள் 300 கிலோவும், மஞ்சள் பட்டுக்கூடுகள் 800 கிலோ மட்டுமே ஏலத்திற்கு வந்தது. ஏலத்தில் சேலம் பட்டுக்கூடு அங்காடியில் மஞ்சள் பட்டுக்கூடுகள் அதிகபட்சம் ரூ.334ம், குறைந்தபட்சம் ரூ.290ம், சராசரியாக 314.20ம், வெண்பட்டுக்கூடுகள் அதிகபட்சம் ரூ.459ம், குறைந்தபட்சம் ரூ.320, சராசரியாக ரூ.433.65ம் தர்மபுரி பட்டுக்கூடு அங்காடியில் மஞ்சள் பட்டுக்கூடுகள் அதிகபட்சம் ரூ.325.50ம், குறைந்த பட்சம் ரூ.240.50ம், சராசரியாக ரூ.290.89ம், வெண்பட்டுக்கூடுகள் அதிகபட்சம் ரூ.411.50ம், குறைந்தபட்சம் ரூ.300ம், சராசரியாக ரூ.366.52 என ஏலம் போனது. இவ்வாறு பட்டு வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறினர்.

வெற்றிலை விலை வீழ்ச்சி



**பரமத்திவேலூர்:** பரமத்திவேலூர் மார்க்கெட்டில் வெற்றிலை விலை வீழ்ச்சியடைந்துள்ளது. நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை பயிரிடப்பட்டுள்ளது. அறுவடைக்கு பின்னர் இந்த வெற்றிலைகளை வேலூர் நான்கு ரோடு தினசரி காய்கறி மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வருவார்கள். இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் ஒரு கோட்டை கற்பூரி வெற்றிலை முதல் ரகம் ரூ.2 ஆயிரத்து 500க்கும், 2வது ரகம் ரூ.2 ஆயிரத்து 300க்கும் ஏலம் போனது. இதில் கடந்த வாரத்தில் ஒரு கோட்டை கற்பூரி முதல் ரகம் ரூ.2 ஆயிரத்து 800க்கும், 2வது ரகம் ரூ.2 ஆயிரத்து 300க்கும் விலை

போனது. அதே போல் கடந்த வாரம் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ.4 ஆயிரத்திற்கும், 2வது ரகம் ரூ.3 ஆயிரத்து 500க்கும் விலைபோனது. ஆனால் இந்த வாரத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ.3 ஆயிரத்து 500க்கும், 2வது ரகம் ரூ.3 ஆயிரத்திற்கும் ஏலம் போனது. கடந்த வாரத்தை விட இந்த வாரத்தில் வெற்றிலை விலை ரூ.500 குறைந்துள்ளது.

**திருச்சி மாவட்டத்தில் தொடங்கியது 6 வது சுற்று கோமாரி தடுப்பூசி முகாம் 3.3 லட்சம் கால்நடைகளுக்கு போட இலக்கு21 நாட்கள் நடைபெறுகிறது**

**திருச்சி, :** கால்நடை களுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போடும் முகாம் ஸ்ரீரங்கத்தில் தொடங்கியது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு கோமாரி நோய் தாக்கி ஏராளமான மாடுகள் இறந்தன. இதையொட்டி மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் திருச்சி மாவட் டத்தில் 14 ஒன்றியங்களில் தொடங்கப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம் மேலூர் சாலை ரோட்டில் நெடுந்தெரு கோயில் மந்தையில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று முன்தினம் (1 ம் தேதி) தொடங்கியது. இந்த 6வது சுற்று முகாம் 1ம் தேதி தொடங்கி 21ம் தேதி வரை 21 நாட்கள் 14 ஊராட்சிகளில் நடை பெறுகிறது. நேற்று நடந்த தொடக்கவிழா முகாமில் தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் டாக்டர் சின்ன துரை தலைமையில், இணை இயக்குனர் டாக்டர் மோகனரங்கன், உதவி இயக்குனர்கள் சுந்தர்ராஜ், சுரேஷ்குமார், பழனிசாமி ஆகியோர் கலந்து கொண்டு முகாமில் 300 மாடுகளுக்கு தடுப்பூசி போட்டனர். இந்த முகாமை, இணை இயக்குனர் சின்னதுரை தொடங்கி வைத்து நிருபர்களிடம் கூறியதாவது;

அந்தநல்லூர், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், தொட்டி யம், துறையூர் உள்ளிட்ட திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்க ளிலும் நேற்று முகாம் தொடங்கியது. வரும் 21ம் தேதி வரை தடுப்பூசி போடப்படும். திருச்சி மாவட்டத்தில் 14 ஒன்றியங்களிலும் 3.3 லட்சம் மாடுகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்லால்குடி, : லால்குடி மற்றும் புள்ளம்பாடி ஒன்றியங்களை சேர்ந்த பொறுப்பாளர்களுக்கு அதிமுக பெரம்பலூர் பாராளுமன்ற வேட்பாளரான மருதைராஜை அறிமுகம் செய்யும் விழா லால்குடியில் நடைபெற்றது.

புறநகர் மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான ரத்தினவேல் தலைமை வகித்து அதிமுக பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதி வேட்பாளர் மருதைராஜை கட்சி பொறுபாளர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். தொடர்ந்து, பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் மருதைராஜ் கட்சி பொறுப்பாளர்களிடம் தன்னை பற்றி அறிமுகப்படுத்தி கொண்டு பேசினார். விழாவில் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ராமு, பொதுக்குழு உறுப்பினர் சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் லால்குடி நடேசன், புள்ளம்பாடி ராஜாராம், தொகுதி கழக செயலாளர் பர்வீன் கனி, யூனியன் சேர்மன்கள் லால்குடி நளாயினி, புள்ளம்பாடி நடராஜன், துணை சேர்மன்கள் லால்குடி தர்மதுரை, புள்ளம்பாடி செல்வி, மாவட்ட கவுன்சிலர்கள் ரீனா, காஞ்சனா, நகர செயலாளர்கள் சுப்ரமணியன், ஜேக்கப் அருள்ராஜ், பிச்சைபிள்ளை, ஜெ.பேரவை ஒன்றிய செயலாளர் விஜயமூர்த்தி, முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, குணசீலன், ஊராட்சி மன்ற தலைவர்கள் செல்வழகன், சரவணன், சித்திரசேனன், ஒன்றிய கவுன்சிலர்கள் சாலை சுந்தரம், லெனின், ஒன்றிய அவைத்தலைவர் விஸ்வநாதன் உள்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**கோமாரி தடுப்பூசி போடும் பணி**

**வலங்கைமான், :** வலங்கைமான் அடுத்த ஆதிச்சமங்கலம் ஊராட்சியில் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி நடைபெற்றது. திருவாரூர் மாவட்டத்தில் மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி மற்றும் தொண்டை அடைப்பான் ஊசி போடும் பணி 1ம்தேதி துவங்கி நடைபெற்று வருகிறது. நேற்று திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அடுத்த ஆதிச்சமங்கலம் ஊராட்சியில் தமிழக அர சால் வழங்கப்பட்ட கறவை பசுக்கள் மற்றும் இதர மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி மற்றும் தொண்டை அடைப்பான் ஊசி போடும் பணி நடைபெற்றது. சந்திரசேகரபுரம் கால்நடை உதவி மருத்துவர் கார்த்திக் மற்றும் கால்நடை உதவி பராமரிப்பாளர் செந்தில் தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டனர். ஊராட்சி துணைத் தலைவர் சுதாகர் ஆகியோர் உடனிருந்தனர்.

**பாரம்பரிய நெல் சாகுபடி பயிற்சி வகுப்பு**

**திருத்துறைப்பூண்டி, :** திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தில் விவசாயிகளுக்கு இல

வச பயிற்சி வகுப்பு வரும் மார்ச் 2ம் தேதி காலை 9 மணியளவில் நடைபெறுகிறது. மேலாண் மை அறங்காவலர் பொன்னம்பலம் தலைமை வகிக்கிறார். தொழில் நுட்பம் குறித்து தமிழ்நாடு இயற்கை வேளாண் வல்லுனர் கூட்டமைப்பு தலைவர் சித்தர் கருத்துரை வழங்குகிறார். கருத்தரங்கத்தை திருவாரூர் மாவட்ட நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவி சங்கர் துவக்கி வைக்கிறார். இதுபற்றி பயிற்சி இயக்குநர் ஜெயராமன் கூறுகை யில், பாரம்பரிய நெல் சாகுபடி குறித்தும், பாரம்பரிய விதை நெல் தேர்வு, விதை நேர்த்தி, விதை பாதுகாப்பு மற்றும் விதை நெல் கோட்டை கட்டும் செய்முறை பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதில் கலந்து கொள்ள உழவர்கள் கிரியேட் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் செல் 9842607609, அலுவலக தொலைபேசி 04369-220954 என்ற எண் களில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள் ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

## பழநி பகுதியில் 400 ஏக்கரில் தென்னை விவசாயம் பாதிப்பு

**பழநி, :** கடும் வறட்சி காரணமாக பழநி சுற்றுவட்டார பகுதியில் 400 ஏக்கரில் தென்னைவிவசாயம்பாதிக்கப்பட்டுள்ளது.
பழநியை சுற்றியுள்ள பகுதிகளில் 600 ஏக்கர் பரப்பளவில் தென்னை விவசாயம் நடைபெறுகிறது.

ஆற்றுநீர், கிணற்றுநீர் பாசனம் மூலம் தென்னை விவசாயம் நடைபெறுகிறது. பழநி பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை பொய்த்து விட்டதால் கால்வாய்கள் வறண்டதோடு, கிணறுகளிலும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து தண்ணீர் வற்றின. இதனால் தண்ணீரின்றி தென்னை மரங்கள் கருக தொடங்கின. சுமார் 400 ஏக்கரில் தென்னை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது 200 ஏக்கரில் மட்டும் கிணற்று பாசனம் மூலம் தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்த கிணறுகளிலும் தண்ணீர் வற்றி வருவதால் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் லாரிகளில் கொண்டு வரும் தண்ணீரை விலைக்கு வாங்கி தென்னந்தோப்புகளுக்கு விவசாயிகள் பாய்ச்சி வருகின்றனர். லாரிகளில் கொண்டு வரப்படும் தண்ணீரை அதிக விலை கூறுவதால் தற்போது இதனை வாங்கி பாய்ச்ச முடியாமல் பரிதவிக்கின்றனர். இதனால் தண்ணீரின்றி தென்னை மரங்கள் கருகும் அபாயம்உள்ளது. தண்ணீர் இல்லாததால் விளைச்சல் பாதிக்கப்பட்டு வரத்தும் குறைந்துள்ளது. ரூ.1,2,3 என கொள்முதல் நிலை மாறி ரூ.5 இருந்து ரூ.18 வரை விலை உயர்ந்துள்ளது. சில கடைகளில் எடை கணக்கில் தேங்காய் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வரும் மாதங்களில் தேங்காய் விலை ரூ.30க்கு விலை உயரவும்வாய்ப்புள்ளது. இதுகுறித்து கோதைமங்கலம் விவசாயி சீனிவாசன்

கூறுகையில், பழநி பகுதியை சுற்றியுள்ள குளங்கள், ஆறு, ஏரிகள் ஆகியவற்றை நம்பி அதனை ஒட்டியுள்ள எனது நிலத்தில் தென்னை வைத்து வளர்த்து வந்தோம். தற்போது மழையில்லாமல் தென்னைமரங்கள் கருகி வருகின்றன. வேளாண் அதிகாரிகள் வறட்சியை சமாளிக்க, தென்னை மரத்தை தாக்கும் சிலந்தி நோய் பற்றியும், வழிகாட்டுதலும் தரவில்லை. ஆதலால் 60 சதவீத தென்னை மரங்கள் 40 நாட்களிலேயே கருகி விட்டன என்றார்.

**கால்நடைகளுக்கான தடுப்பூசி முகாம்**

**திருப்புவனம், :** திருப்புவனம் அருகே மடப்புரத்தில் கோமாரி, வாய் காணை மற்றும் கால் காணை நோய்களுக்கான தடுப்பூசி முகாம் நடந்தது. முகாமினை யூனியன் சேர்மன் பாக்யலட்சமி அழகுமலை தொடங்கி வைத்தார். கால்நடை மருத்துவர் மோகன்தாஸ் தலைமை வகித்தார். மடப்புரம் ஊராட்சி துணை தலைவர் சபர்மதி வரவேற்றார். இதில் மடப்புரம், தேளி, கண்ணாயிருப்பு, ஏனாதி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டது. டாக்டர் மோகன்தாஸ் கூறும்போது, கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதன் மூலம் நோய்களில் இருந்து அவற்றை பாதுகாக்கலாம். எனவே கால்நடை வளர்ப்போர் அனைவரும் தடுப்பூசியை தவறாமல் கால்நடைகளுக்கு போட வேண்டும் என்றார்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

**கடவூர், :** கடவூர் ஒன்றியத்தில் 2ம் கட்டமாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் மைலம்பட்டியில் நடைபெற்றது.

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக கால்நடைகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டது. இதற்கு கால்நடை துறை மருத்துவர்களை கொண்டு தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. மைலம்பட்டியில் நடந்த முகாமிற்கு தலைவர் சபீனாபேகம் நிஜாமுதீன் தலைமை வகித்தார். ஊராட்சி மன்ற துணை தலைவர் அசன்முகம்மது முன்னிலை வகித்தார். டாக்டர் மணிவண்ணன் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு துவக்கி வைத்தார்.மேலும் இந்த தடுப்பூசி முகாம் ஏற்கனவே போட்ட மாடுகளாக இருந்தாலும் மீண்டும் இந்த ஊசி போட்டுக் கொள்ளலாம். இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**மணமேல்குடி ஒன்றியத்தில் கோடை பயறு சாகுபடி பயிற்சி**

**புதுக்கோட்டை, :** தேசிய வேளாண் வளர்ச் சித் திட்டம், உணவு தானிய குழுமம் (பயறு) திட்டத்தில் மணமேல்குடி ஒன்றியம் விச்சூர் கிராமத்தில் கோடை பயறு சாகுபடி முனைப்பு இயக் கம் மற்றும் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. விச்சூர் கிராமத்தில் நடந்த விவசாயிகள் பயிற் சிக்கு ஊராட்சித் தலைவர் காளிமுத்து தலைமை வகித்தார். பயிற்சியை வேளாண் துணை இயக்குநர் (மத்திய அரசுத் திட்டம்) சதானந்தம் துவக்கி வைத்து பேசுகை யில், விவசாயிகள் பயறு சாகுபடி தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து கோடையில் தென்னந்தோப்பு மற்றும் பாசன வசதியுள்ள இடங்களில் குறைந்த நீர் தேவைப்படும் உளுந்து ரகங்களான வம்பன் 4 மற்றும் 5னை ஊடு பயிராகவும், தனிபயிராகவும் சாகுபடி செய்திட வேண்டும். இடுபொருட்கள் அனைத்தும் மானியத்தில் வழங்கப்படுகிறது என்றார்.

மேலும், பிரசார ஊர்தியில் கோடை மற்றும் பயறு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தான விளக்க பேனர்கள் வைக்கப்பட்டிருந்தது. விச்சூர், தண்டலை, இடையாத்தூர், நீர்விலாங்குளம், மணமேல்குடி மற்றும் இதர கிராமங்களில் ஒலிபெருக்கி மூலம் கோடை யில் பயறு சாகுபடி செய்வது குறித்து பிரசாரம் செய்யப்பட்டது. பயிற்சியில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் நாகேந்திரன், உழவர் பயிற்சி நிலையம் வேளாண் துணை இயக்குநர் சாந்தி, திட்ட ஆலோசகர் திருப் பதி, வேளாண் உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாட்டு) திருப்பதி, வேளாண் அலு வலர் (மத்திய அரசு திட்டங்கள்) ஜெகதீஸ்வரி ஆகியோர் பயறு சாகுபடி நுட்பங்கள், மண், நீர் பாதுகாப்பு இதர திட்டங்கள் மற்றும் அரசு வழங்கும் மானியங்கள் குறித்து விரிவாக விளக்கினர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. மேலும் 7 விவசாயிகளு க்கு மானியத்தில் விதை, நுண்சத்து நுண் ணுயிர் உர பொட்டலங்கள் வழங்கப்பட்டன. முன்னதாக மணமேல்குடி வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி வரவேற்றார். சரவணன் அட்மா திட்ட தொழில்நுட்ப வட்டார மேலாளர் சரவணன் நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி, துணை வேளாண் அலுவலர் மோகன்தாஸ் மற்றும் களப்பணியாளர்கள் முருகன், தருமர் ஆகியோர் செய்திருந்தனர்.

**கோடைக்கேற்ப விவசாயிகள் நெல், மக்காச்சோளம் பயிரிட வலியுறுத்தல்**

**கறம்பக்குடி, :** கோடை காலத்தில் நெல் மற்றும் மக்காச்சோளம் சாகுபடி செய்யுமாறு விவசாயிகளை வேளாண் அதிகாரி வலியுறுத்தியுள்ளார். கறம்பக்குடி அருகே கந்தவர்வகோட்டை வட்டாரத்திற்குட்பட்ட விவசாயிகள் அனைவரும் வருகின்ற கோடைகாலத்தில் சூழ்நிலைகளுக்கேற்ப எங்கெங்கு

வாய்ப்புகள் உள்ளதோ அங்கெல்லாம் நெல் மற்றும் உளுந்து, துவரை மற்றும் மக்காச்சோளம் ஆகிய பயிர்களை சாகுபடி செய்யவேண்டும். மேலும் குறைந்த நீரை கொண்டு திருந்திய நெல் சாகுபடி செய்து விவசாயிகள் அதிக மகசூல் பெற்றிடவும், அதிக லாபம் தரக்கூடிய உளுந்து, மக்காச்சோ ளம் பயிர்களை விவசாயிகள் பெருமளவில் சாகுபடி செய்து பயன்பெற வேண்டு மாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தகவலை கந்தர்வகோட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

**கருப்பு பன்னீர் திராட்சை இருமடங்கு விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

**கம்பம், :** கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் வரத்து குறைவால் கருப்பு பன்னீர் திராட்சை விலை இருமடங்கு உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான கம்பம், கூடலூர், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, ஆனைமலையன்பட்டி, பூசாரிகவுண்டன்பட்டி, ஓடைப்பட்டி, தென்பழனி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கருப்பு பன்னீர் திராட்சை பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் திராட்சை பழங்கள் திருச்சி, மதுரை, சென்னை, கொல்கத்தா மற்றும் கேரள மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக கடும் வெயிலின் காரணமாக தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் திராட்சை கொடிகள் போதிய விளைச்சல் தரவில்லை. தற்போது கருப்பு பன்னீர் திராட்சை பழங்களின் வரத்து குறைந்துள்ளது. இதன் எதிரொலியாக அதன் விலை படிப்படியாக உயர்ந்து வருகிறது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயி சவுடப்பன் கூறுகையில், “கடந்த சில ஆண்டுகளாகவே திராட்சைக்கு போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டம் அடைந்து வந்தனர். விவசாயத்திற்கு செலவழித்த பணம் கூட கிடைக்காமல் பரிதவித்தனர். இதனால் பெரும்பாலான விவசாயிகள் திராட்சை விவசாயத்தை கைவிட்டு, மாற்று விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மழை பெய்யாதது இந்த ஆண்டு விளைச்சலை பாதித்துள்ளது. தேவை அதிகரிப்பு, வரத்து குறைவு காரணமாக தற்போது விலை உயர்ந்துள்ளது. கடந்த 20 தினங்களுக்கு முன்பாக கிலோ ரூ.15 வரை விற்பனை செய்யப்பட்ட கருப்பு பன்னீர் திராட்சை, தற்போது கிலோ ரூ.32

வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் மகிழ்ச்சியாக உள்ளது“ என்றார்.

**கறிவேப்பிலை பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

**காட்டுமன்னார்கோவில், :** காட்டுமன்னார்கோவில் பகுதியில் வீராணம் ஏரி மேற்கரையில் கறிவேப்பிலை கன்றுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர். சிறந்த வடிகால் வசதி உடைய சமப்படுத்தப்பட்ட செம்மண் பரப்பில், விதைகள் தூவப்பட்டு குறிப்பிட்ட கால இடைவெளியில் பாத்திகளில் தண்ணீர் தெளிக்கப்படுகிறது, ஒரு வருடம் முடிந்தவுடன் கன்றுகளை விற்பனைக்கு அனுப்பலாம். இங்கு உற்பத்தியாகும் கன்றுகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. நடவு செய்த ஒரு வருடம் கழித்தே தழைகளை பறித்து விற்பனை செய்யப்படுகிறது. வருடத்திற்கு வருடம் உரத்தை அதிகப்படுத்தி செல்ல வேண்டும். உணவு வகைகளில் மணமூட்ட பயன்படுத்தப்படும் முக்கியமான வாசனை பயிர் கறிவேப்பிலை. மருத்துவ குணங்கள் அதிகம் உள்ளது. உணவில் உள்ள நச்சுப்பொருட்களை நீக்கும் சக்தி உள்ளது. சுண்ணாம்பு, இரும்புச்சத்து அதிகம் காணப்படுகிறது. எனவே விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கறிவேப்பிலை கன்றுகளை ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர்.

**கீழ்பவானியில் தண்ணீர் திறக்கக் கோரி அமைச்சர்களிடம் விவசாய சங்க பிரதிநிதிகள் நேரில் வலியுறுத்தல்**

**ஈரோடு,:**பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் புன்செய் பாசனத்துக்கு ஜனவரி முதல் வாரத்தில் இருந்து ஏப்ரல் 30ம் தேதி வரை தண்ணீர் திறந்து விட்டிருக்க வேண்டும். ஆனால் கடும் வறட்சி காரணமாக போதிய நீர் இருப்பு இல்லாததால் நடப்பு சீசனில் இதுவரை புன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, நீலகிரி மாவட்டத்திலுள்ள நீர் மின் அணைகளில் இருந்து 8 டிஎம்சி, நீரை கீழ்பவானி புன்செய் பாசனத்துக்குட்பட்ட 1 லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களுக்கு திறந்து விடக்கோரி கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மொத்தம் 3 முறை ரிட் மனுதாக்கல் செய்யப்பட்டு பொதுப்பணித்துறை மற் றும்

மின்வாரியத்திடம் ஐகோர்ட் தரப்பில் விளக் கம் கேட்கப்பட்டுள்ளது, இதற்கிடையே கடந்த 36ம் தேதி கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் விவசாயிகள் ஈரோடு கோணவாய்க்காலில் உள்ள பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இதன் தொடர்ச்சியாக கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன், செயலாளர் வடிவேல், பொருளாளர் ஈஸ்வரமூர்த்தி, துணைத்தலைவர் ராமசாமி, தமிழக விவசாயிகள் சங்கம் மாவட்ட தலைவர் பெரியசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில துணை தலைவர் வக்கீல் துளசிமணி ஆகியோர் சென்னையில் நேற்று முன்தினம் பொதுப்பணித்துறை மற்றும் மின்வாரிய அமைச்சர்களை நேரில் சந்தித்து நீர்மின் அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விட அனுமதி வழங்க வலியுறுத்தினர்.

இதற்கிடையே விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பவானிசாகர் அணைக்கு நீலகிரி மாவட்டத்திலுள்ள நீர் மின் அணைகளில் இருந்து 8 டிஎம்சி தண்ணீர் திறந்து விட பொதுப்பணித்துறையினர் மின்வாரியத்திற்கு பரிந்துரை செய்துள்ளனர். இருப்பினும் இந்த பரிந்துரையை மின்வாரியம் ஏற்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி அவசியம் அரியலூர் கலெக்டர் அறிவுரை

**அரியலூர், :** அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்ட செய்திக்குறிப்பு; கால்நடைகளை தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்றான கால்நோய் வாய் நோய் எனப்படும் கோமாரி (கசப்பு) நோய், 63 வகையான வைரஸ் கிருமிகளால் பரவுகிறது. மழைக் காலத்திலும், பனிக் காலத்திலும் இக்கிருமியானது தண்ணீர் மூலமாகவும், காற்றின் மூலமாகவும் மிக விரைவில் பரவக்கூடியதாகும். இந்நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளில் வாயிலும், நாக்கிலும் கால் குழம்புகளுக்கு இடையிலும் புண்கள் ஏற்படும். இதன் காரணமாக கால்நடைகள் தீனி உட்கொள்ளமுடியாமல் மிகவும் பாதிக்கப்படுவதுடன் மிகவும் மெலிந்துவிடும். வெயில் காலத்தில் இந்நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு மூச்சிரைக்கும். தோலின் தன்மை கடினமாகவும், தோல் மயிர்கள் அதிகம் வளர்ந்தும் காணப்படும். பால் கறவை குறையும். கறவைப் பசுக்களில் பால் குடித்து வரும் கன்றுகள் உடனடியாக இறந்துவிடும். எனவே இந்நோய் தாக்காவண்ணம் இருப்பதற்கு மாடுகளுக்கு ஆண் டுக்கு 2 முறை தடுப்பூசி போடுவதே சிறந்த நிவாரணம்.

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையினரால் கால் வாய்நோய்த் தடுப்புத் திட்டம் 6வது சுற்றின் கீழ், கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடப்பு ஆண்டில் மார்ச் 1 முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியானது இம்மாதம் 21ம்தேதி வரை நடைபெறும் என்றார்.

'கோமாரிநோயின்அறிகுறிகள்'

கோமாரி நோயின் அறிகுறிகள் குறித்து கலெக்டர் சரவணவேல்ராஜ் மேலும் கூறியதாவது: கோமாரி நோய் பாதிக்கப்பட்ட கறவை மாடுகளுக்கு வாயிலிருந்து நுரை கலந்த உமிழ் நீர் கயிறு போல ஒழுகிய வண்ணம் இருக்கும். கால் குளம்பு இடைவெளி மற்றும் நாக்கு, மடி காம்புகளில் கொப்புளங்கள் ஏற்படும். அசை போடுவதால் கொப்புளங்கள் உடைந்து புண்ணாகிவிடும். அசை போடும்போது மாடு சப்பு கொட்டுவதுபோல் சப்தம் உண்டாகும். மடிவீக்கம் நோய், மடி காம்புகளில் புண்கள் ஏற்பட ஏதுவாகும். சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படலாம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மாடுகளின் பாலை கன்றுகளுக்கு கொடுக்கக் கூடாது. அவ்வாறு கொடுக்க நேரிட்டால் கன்றுகளும் இறக்க நேரிடும். கோமாரி நோய் பாதிக்கப்பட்ட மாடுகள், காய்ச்சலுடன் காணப்படுவதுடன் தீவனம் உட்கொள்ளாது மந்த நிலையிலேயே இருக்கும். அசை போடாது. இவை அதிக அளவில் நீர்த் தாகத்துடன் காணப்படும். அதே வேளையில், பால் உற்பத்தி கணிசமாகக் குறையும். இவை அனைத்தும் கோமாரி நோய்த் தாக்குதலின் அறிகுறிகளாகும் என்றார் கலெக்டர்.

## கோமாரிநோய் தடுப்பூசி முகாம்

**பாபநாசம், :** தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறையின்கீழ் உமையாள்புரம் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று முன்தினம் நடந்தது. முகாமில் 250 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. முகாமில் உதவி இயக்குனர்கள் முகமது உதுமான், ராஜக்கொடி, கபிஸ்தலம் கால்நடை உதவி மருத்துவர் வடிவேலன், கால் நடை ஆய்வாளர் தனலட்சுமி, கால்நடை உதவியாளர்கள் சாந்தி, ரவிச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர் வீரையன் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு விதை கிராம பயிற்சி**

**கும்பகோணம், :** கும்பகோணம் அடுத்த கொற்கை ஊராட்சியில் விவசாயிகளுக்கு விதை கிராம பயிற்சி வழங்கப்பட்டது. ஊராட்சி தலைவர் தியாகராஜன் தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் சுமதி சம்பத் முன்னிலை வகித் தார். முகாமில் வேளா ண்மை உதவி இயக்குனர் லடசுமிகாந்தன் பேசுகை யில், பயிர் பாதுகாப்பு, விதை நேர்த்தி, நோய் பூச்சியிலிருந்து பயிரை காக்கும் முறை, பயறு வகைகள், நுண்சத்துகளின் மூலம் மகசூலை அதிகரிப்பது, அரசு மானியங்கள் குறித்து எடுத்துரைத்தார்.
உயிர் உரங்கள் அவசி யம் மற்றும் பயறு உற்பத்தியின் தேவை, அதனால் ஏற்படும் நன்மை, தீமை கள் மற்றும் விதை உற் பத்தி குறித்து வேளாண் அலுவலர் செல்வமணி ஆகியோர் விளக்கினர். அட்மா தொழில்நுட்ப வல்லுனர் கார்த்தி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் உதவி அலுவலர் பகத்சிங் நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கடந்த இரண்டு மாதங்களில் காபி ஏற்றுமதி 15% வளர்ச்சி**



**புதுடெல்லி,** கடந்த இரண்டு மாதங்களில் (ஜனவரி, பிப்ரவரி) காபி ஏற்றுமதி 15 சதவீதம் அதிகரித்து 62,956 டன்னாக உயர்ந்துள்ளது என காபி வாரியம் தெரிவித்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே காலத்தில் 54,679 டன்னாக இருந்தது. பிரேசிலின் காபி உற்பத்தி குறைந்திருக்கும் என்ற மதிப்பீடுகளால்

சர்வதேச சந்தையில் காபி விலை உயர்ந்து காணப்பட்டது. இதனையடுத்து இந்திய ஏற்றுமதி அதிகரித்துள்ளது. ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் காபி ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் ரூ.824 கோடியிலிருந்து ரூ.937 கோடியாக உயர்ந்துள்ளது.

மொத்த காபி ஏற்றுமதியில் அராபிகா ரகம் ஏற்றுமதி 35.11 சதவீதம் அதிகரித்து 14,696 டன்னிலிருந்து 19,856 டன்னாக உயர்ந்துள்ளது. ரோபஸ்டா ஏற்றுமதி 7.2 சதவீதம் உயர்ந்து 25,542 டன்னிலிருந்து 27,382 டன்னாக அதிகரித்துள்ளது. இன்ஸ்டெண்டு காபி ஏற்றுமதி இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்து 3,918 டன்னிலிருந்து 10,902 டன்னாக உயர்ந்துள்ளது.

இந்தியாவிலிருந்து இத்தாலிக்கு அதிகபட்சமாக 17,205 டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து ஜெர்மனி (7,513 டன்), பெல்ஜியம் (3,709 டன்), ஜோர்டான் (3,189 டன்), துருக்கி (3,053 டன்) மற்றும் ரஷ்யா (2,576 டன்) ஆகிய நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு 2013–14 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) காபி உற்பத்தி 2.1 சதவீதம் குறைந்து 3.12 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது. இது சென்ற பருவத்தில் (2012–13) 3.18 லட்சம் டன்னாக இருந்தது.

**கோபி அருகே கோமாரிநோய் தாக்குதலை தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி**

**கோபிசெட்டிபாளையம்-**

கோபி அருகே கோமாரி நோய் தாக்குதலை தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

<u>கோமாரிநோய்</u>

ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஆண்டு கால்நடைகளுக்கு கோமாரிநோய் தாக்கியது. இதனால் கால்நடைகள் நோய் தாக்கி பலியாகின. அப்போது கால்நடைகளுக்கு கோமாரிநோய் தாக்குதலை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. அதன்படி கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் குழுக்கள் அமைத்து ஒவ்வொரு கிராமமாக சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், வெளிமாநிலங்களில் இருந்து கால்நடைகளை கொண்டு வருவதற்கு தடை விதிக்கப்பட்டது. இதேபோல் கால்நடை சந்தைகள்

நடத்துவதற்கும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது. பல்வேறு நடவடிக்கைகளுக்கு பின்னர் ஈரோடு மாவட்டத்தில் கோமாரிநோய் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது.

தடுப்பூசி

இந்தநிலையில் இந்தஆண்டு கால்நடைகளுக்கு கோமாரிநோய் தாக்குதலை தடுக்கும் வகையில் தமிழக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

கோபி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் ஒவ்வொரு கிராமமாக கால்நடைத்துறை டாக்டர்கள் சென்று கால்நடைகளுக்கு தடுப்பூசிகளை போட்டு வருகிறார்கள். கோபிசெட்டிபாளையம் அருகே கடுக்காம்பாளையம், வெள்ளாங்கோவில், அய்யம்புதூர், நாகதேவம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று கோமாரிநோய் தடுப்பூசி போடும் முகாம் நடைபெற்றது. இதில் விவசாயிகள் தங்களது கால்நடைகளை கொண்டுவந்து தடுப்பூசிகளை போட்டுக்கொண்டனர். இதில் கன்றுக்குட்டி முதல் அனைத்து வயதுடைய மாட்டுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.

12 ஆயிரம் மாடுகள்

இதுகுறித்து கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

ஈரோடு மாவட்டத்தில் 3 லட்சத்து 70 ஆயிரம் மாடுகள் உள்ளன. இதில் கோபி கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சுமார் 2 லட்சத்து 54 ஆயிரம் மாடுகள் உள்ளன. இந்த மாடுகளுக்கு கோமாரிநோய் தாக்குதலை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

சத்தியமங்கம், கோபிசெட்டிபாளையம், பவானி, அந்தியூர் ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடுவதற்காக 45 மருத்துவ குழுவினர் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுவினர் ஒவ்வொரு கிராமமாக சென்று கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவார்கள்.

கடந்த 2 நாட்களில் மட்டும் சுமார் 12 ஆயிரம் மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு உள்ளது. இவ்வாறு கால்நடைகளை காப்பாற்ற தடுப்பூசி முகாம் அமைக்கப்படும்போது விவசாயிகள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

விழிப்புணர்வு

முகாம்களில் விவசாயிகள் தங்களது கால்நடைகளை கொண்டு வந்து தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். கோமாரிநோய் தாக்குவது போன்று அறிகுறி தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரிக்கு கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும். விவசாயிகளின் தவறான அணுகுமுறையால்தான் கால்நடைகள் இறந்துவிடுகின்றன. எனவே விவசாயிகள் விழிப்புணர்வுடன் செயல்படவேண்டும். இறந்த கால்நடைகளை வாய்க்கால் போன்ற நீர்நிலைகள் வீசக்கூடாது.

இவ்வாறு அவர் கூறினார்.

**எறும்பூரில் கால்நடை மருத்துவ முகாம்**



**சேத்தியாத்தோப்பு,**

புவனகிரி ஒன்றியம் எறும்பூர் ஊராட்சியில் வளையமாதேவி கால்நடை மருத்துவமனை சார்பில் கோமாரி நோய் தடுப்பு பூசி முகாம் நடைபெற்றது. இதற்கு ஊராட்சி மன்றதலைவர் இளங்கோவன்தலைமை தாங்கினார். முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் லட்சுமிநாராயணன் முன்னிலை வகித்தார். பால்கூட்டுறவு சங்க தலைவர் சங்கீதாஉத்தண்டி வரவேற்றார்.

முகாமில் கால்நடை மருத்துவர் குமரேசன் தலைமையில் ஆய்வாளர் சுமதி, பராமரிப்பு உதவியாளர் காமாட்சி ஆகியோர் 200க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டப்பட்டது.

**சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நெல் வரத்து அதிகரிப்பு**



**சங்கராபுரம்,**

சங்கராபுரம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு நெல்வரத்து அதிகரித்துள்ளது.

**நெல் வரத்து**

சங்கராபுரம் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டு உள்ளது. தற்போது இவை அறுவடை செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நெல் வரத்து கடந்த சில வாரங்களாக அதிகரித்து உள்ளது. வாரத்தின் முதல் நாளான நேற்று சங்கராபுரம், வட பொன்பரப்பி, ஆலத்தூர், மூரார்பாளையம் பகுதியில் இருந்து 2,500 மூட்டை நெல் விற்பனைக்கு வந்தது. இவற் றுக்கு வியாபாரிகள் மறை முகமாக விலை நிர்ணயம் செய்தனர். 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை கோ-45 ரக நெல் ரூ.1,022-க்கும், பொன்னி நெல் ரூ.1,228-க்கும், சொர்ணா நெல் ரூ.1,005-க்கும், ஏ.டி.டி-37 ரக நெல் ரூ.985-க்கும் வியா பாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டது.

**ஒரு மூட்டை எள் ரூ.9,200**

இதேபோல் கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 100 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை மணிலா அதிகபட்சமாக ரூ.3,911-க்கும், குறைந்த பட்சமாக ரூ. 3,399-க்கும், எள் அதிக பட்சமாக ரூ.9,199-க்கும், குறைந்த பட்சமாக ரூ.7,333-க்கும், உளுந்து அதிகபட்சமாக ரூ.5,330-க்கும், குறைந்தபட்சமாக ரூ.4,499-க்கும், மக்காச் சோளம் அதிக பட்சமாக ரூ.1,262-க்கும், குறைந்த பட்சமாக ரூ.1,069-க்கும் விற்பனையானது.

**அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட வேண்டுகோள்**



**அரியலூர்,**

அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட வேண்டுகோள் விடப்பட்டுளளது.

**<u>கோமாரி நோய்</u>**

கால்நடைகளை தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று கால்நோய் வாய்நோய் என்கிற கோமாரி (கசப்பு) நோய். இந்நோய் 63 வகையான வைரஸ் கிருமி களால் பரவு கிறது. மழைக் காலத்திலும், பனிக் காலத்திலும் இக்கிருமி யானது தண்ணீர் மூலமாகவும், காற்றின் மூலமாகவும் மிக விரைவில் பரவக் கூடியது..

**<u>நோயின் அறிகுறிகள்</u>**

வாயிலிருந்து நுரை கலந்த உமிழ் நீர் கயிறு போல ஒழுகிய வண்ணம் இருக்கும். கால்குளம்பு இடைவெளி மற்றும் நாக்கு, மடி காம்புகளில் கொப்புளங்கள் ஏற்படும். அசைபோடுவதால் கொப் புளங்கள் உடைந்து புண்ணாகி விடும். அசை போடும்போது மாடு சப்பு கொட்டுவதுபோல் சப்தம் உண்டாகும்.

**<u>கருச்சிதைவு</u>**

மடிவீக்கம் நோய், மடி காம்புகளில் புண்கள் ஏற்பட ஏதுவாகும். சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படலாம். பாதிக்கப்பட்ட மாடுகளின் பாலை கன்றுகளுக்கு கொடுக்கக் கூடாது. அவ்வாறு கொடுக்க நேரிட்டால் கன்றுகள் இறந்துவிடும்.

**<u>நோயின் தன்மை</u>**

இந்நோயினால் பாதிக்கப் பட்ட கால்நடைகளின் வாயி லும், நாக்கிலும் கால் குழம்பு களுக்கிடையிலும் புண்கள் ஏற்படும். அவைகள் தீனி உட் கொள்ளமுடியாமல் மிகவும் பாதிக்கப்படும். மிகவும் மெலிந்து விடும். வெயில் காலத்தில் நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மூச்சிரைக்கும். தோலின் தன்மை கடினமாகவும், தோல் மயிர்கள் அதிகம் வளர்ந்தும் காணப்படும். பால் கறவை குறையும். கறவைப் பசுக்களில் பால் குடித்துவரும் கன்றுகள் உடனடியாக இறந்து விடும்.

**<u>தடுப்பூசி</u>**

எனவே அரியலூர் மாவட் டத்தில் இந்நோய் தாக்கா வண்ணம் இருப்பதற்கு மாடுக ளுக்கு வருடத்திற்கு இரு முறை தடுப்பூசிப் பணிமேற் கொள் வது ஒன்றே சிறந்த நிவார ணம்.

இம்மாவட்டத்தில் கால் நடை பராமரிப்புத் துறை யின ரால் கால் வாய் நோய்த்தடுப்புத் திட்டம் 6-வது சுற்றின் கீழ் 2014-ம் வருடம் மார்ச் 21-ந் தேதி வரை கால் வாய்நோய் தடுப்பூசி பணி மேற் கொள்ளப்பட உள்ளது.

**<u>வேண்டுகோள்</u>**

எனவே கால்நடைகளை வளர்ப்போர் தங்கள் கிராமத் திற்கு தடுப்பூசி குழுவினர் வரும் பொழுது 4 மாத வயதுள்ள கன்று முதல் சினை, கறவை உள்ளிட்ட தங்களின் அனைத்து மாடு களுக்கும் தவறாமல் கால் வாய்நோய் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் படி கேட்டு கொள்ளப் படுகிறார்கள். மேற்கண்ட தகவலை கலெக்டர் சரவணவேல்ராஜ் தெரிவித்துள்ளார்.

**தென்னை மரங்களுக்கு காப்பீட்டு திட்டம் விவசாயிகள் பயனடையலாம்**



**பனைக்குளம்,**

தென்னை விவசாயிகள் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடைய லாம்.

**<u>தென்னை காப்பீடு</u>**

வெள்ளம், புயல், வறட்சி, பூச்சிநோய் தாக்குதல், தீ விபத்து மற்றும் இயற்கை சீற்றங்களால் தென்னை மரங்கள் முழுமையாக பாதிக்கப்பட் டாலோ அல்லது முற்றிலும் பலன் கொடுக்காத நிலை ஏற் பட்டாலோ தென்னை மர காப்பீட்டு திட்டத்தில் இழப் பீடு வழங்கப்படும். காப்பீட்டு திட்டத்தில் சேர தென்னை சாகுபடி விவசாயிகள் தனிப் பயிராகவோ, ஊடு பயிரா கவோ வரப்பில் வரிசையா கவோ, வீட்டு தோட்டத் திலோ குறைந்தபட்சம் பலன் தரக்கூடிய 5 மரங்களையா வது சாகுபடி செய்திருக்க வேண்டும்.

ஆண்டுக்கு 30 காய்களுக்கு மேல் மகசூல் தரக்கூடிய மரங் களை இத்திட்டத்தில் சேர்க் கலாம். குட்டை மற்றும் ஒட்டு ரகங்கள் 4 ஆண்டு முத லும், நெட்டை ரகங்கள் 7ம் ஆண்டு முதல் 60ம் ஆண்டு வரை காப்பீடு செய்யலாம். ஒரு எக்டேருக்கு சுமார் 135 மரங்கள் மட்டுமே காப்பீடு செய்ய தகுதியாகும். விவசாயி கள் தாங்கள் சாகுபடி செய் துள்ள மரங்களின் எண் ணிக்கை, வயது மற்றும் பராமரிப்பு பற்றிய சுயஉறுதி முன்மொழிவு அளிக்க வேண் டும்.

**<u>வரைவோலை</u>**

தென்னை விவசாயிகள் தங்கள் அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி முன் மொழிவு படிவத்தை பெற்று பூர்த்தி செய்து பிரீமிய தொகையை வரைவோலை யாக ஆக்ஸிஸ் வங்கியில் சென்னையில் செலுத்தக்க வகை யில் எடுத்து அதனுடன் தென்னை சாகுபடி சிட்டா, அடங்கல் இணைத்து வேளாண்மை துறை அலுவல கத்தில் சமர்ப்பிக்க வேண் டும். இந்த ஆண்டில் எந்த தேதி யில் பிரீமியம் செலுத்தப்படு கின்றதோ, அடுத்த அடுத்த மாதம் 1-ந்தேதியில் இருந்து ஒரு வருட காலத்திற்கு பாலிசி வழங்கப்படும்.

7 வயது முதல் 15 வயது உள்ள மரங்களுக்கு விவசாயி கள் மரம் ஒன்றுக்கு ரூ.2.25 வீதமும், 16 முதல் 60 வயது வரை உள்ள மரங்களுக்கு ரூ.3.50 வீதமும் பிரீமியம் செலுத்த வேண்டும். மரங்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகள் இழப்பீடும் கோரும் மனுவை பூர்த்தி செய்து பாதிக்கப்பட்ட நாளில் இருந்து 15 நாட்களுக் குள் வேளாண் காப்பீட்டு நிறுவனத்துக்கு தெரிவிக்க வேண்டும். பாலிசி காலத்தில் மரங்கள் முழுமையாக பாதிக் கப்படாமல் இழப்பீடு வழங் கப்படும். காப்பீட்டு

தொகை 7 முதல் 15 வயதுள்ள மரங்க ளுக்கு தலா ரூ.900 வீதமும், 16 முதல் 60 வயதுள்ள மரங்க ளுக்கு தலா 1,750 வீதமும் வழங்கப்படும். வறட்சிக்கான நஷ்டஈடு அருகில் உள்ள மழைமானியில் பதிவாகி உள்ள மழையின் அளவோடு ஒப்பிட்டு தீர்மானிக்கப்படும்.

**<u>நஷ்டஈடு</u>**

10 முதல் 30 மரங்கள் காப் பீடு செய்யும் போது குறைந்த பட்சம் 2 மரமும், 31 முதல் 100 மரங்கள் காப்பீடு செய்யும் போது குறைந்தபட்சம் 3 மர மும், 100 மரங்களுக்கு மேல் காப்பீடு செய்யும் போது குறைந்தபட்சம் 4 மரமும் பாதிக்கப்பட்டிருந்தால் நஷ்ட ஈடு பெற தகுதியாகும். மேலும் விவரங்களை விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை உதவி இயக்கு னர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.